**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP. No. 25/2023**

ம.சா. 2 தேதி.12.03.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr. ஸ்ரீதர் | த/பெ, | பாலாஜி |
| வயது | 46 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் ஜி.வி. மருத்துவ மனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 07.02.2026 அன்று எனது மருத்துவ மனையில் பணியில் இருக்கும் போது மனுதாரர் சந்தோஷ் வயது 24 என்ற நபர் அவருக்கு வலது கணுக்காலில் வலி மற்றும வீக்கம் இருப்பதாக என்னிடம் பரிசோரனைக்காக வந்தார். அவரை பரிசோதனை செய்து எக்ஸ்ரே எடுத்து பார்த்ததில் அவருக்கு வலது கணுக்காலில் பிளேட் மற்றும் ஸ்குரு பொருத்தப்பட்டு இருந்தது, மேலும் எலும்பு கூடிய நிலையில் இருந்தது. அறுவை சிகிச்சை செய்து பிளேட் மற்றும் ஸ்குருவை நீக்க வேண்டும் என்று நான் அறிவுரை கூறினேன். அதற்கு சுமார் ரூபாய் 50 ஆயிரம் வரை அனைத்து மருத்துவ செலவுகள் ஏற்படக் கூடும் என்று சான்று வழக்கிறேன். நான் எடுத்து பார்த்த நுண்கதிர் படம் மற்றும் நான் வழங்கிய சான்று எதிர்மனுதாரல் தரப்பில் பின்னார் ஏற்படக் கூடிய செலவுகளுக்கு தோராயமாக சான்று வழங்க முடியாது என ஆட்சோபனை செய்து அதற்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது **ம சா ஆ 11 மற்றும் 12 ஆகும்**. மருத்துவ குறிப்பு **ம.சா.ஆ.13** என குறியீடு செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**:–

விபத்து நடந்த காலகட்டத்தில் என்னிடம் மனுதாரர் சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். பிளேட் மற்றும் ஸ்குருவை நீக்க ரூ.50,000 செலவு ஆகும் என குறிப்பிட்டுள்ளேன். அந்த அறுவை சிகிச்சை அரசு பொது மருத்துமவனையில் செய்தால் இலவசமாக செய்யலாம் என்றால் சரிதான். இந்த விபத்து நடந்த 4 ஆண்டுகள் ஆகியுள்ளது முன்கூட்டியே எலும்புகள் கூடியிருக்கும் என்றாலும் அறுவை சிகிச்சை செய்து அதனை சரிசெய்திருக்கலாம் என்றாலும் தற்போது தான் அவருக்கு வலி ஏற்பட்டுள்ளது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.